வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 166/2021

வழக்கு சாட்சி LW2 /PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன், தலைமை காவலர், எம்.2 பால்பண்ணை காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஏகாம்பரம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 47 |

தேதி 12.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் எம்.2 பால்பண்ணை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2020 ஆம் ஆண்டு எம்.2 பால்பண்ணை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். 17.10.2020 அன்று மதியம் 1 முதல் 9 வரை ரோந்து அலுவலில் உதவி ஆய்வாளர் வேலன்ராஜ் மற்றும் முதல் நிலை காவலர்உதயகுமார் பணியில் இருந்தார். உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கொசப்பூர் ஏரி அருகில் ஒரு நபர் நீர்நிலையில் தண்ணீர் திருடுவதற்காக தயார் நிலையில் இருந்து ஒஸ், பப்பு, மோட்டாருடன் தயார் நிலையில் இருந்தார். அப்போது மதியம் 4.00 மணியிருக்கும். எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை விரட்டி பிடித்தோம். அவரை விசாரித்தபோது அவரது பெயர் பெரியசாமி என்றும், அப்பா பெயர் வெங்கடேஷ் என்றும், பெரியமாத்தூர்

என்றும் கூறினார். ஆஜர் எதிரிதான் அந்த பெரியசாமி. அவர் எங்களது விசாரணையில் தண்ணீரை திருட்டு தனதமாக எடுப்பதாக கூறினார். மாலை 4.00 மணியளவில் அவரை கைது செய்து 4.30 மணியளவில் நிலையம் அழைத்து வந்து நிலைய பிணையில் தக்க ஜாமினில் விடுவிக்கப்பட்டார். உதவி ஆய்வாளர் எங்களை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த அன்று நான் பணியில் இருந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறுகின்றவாறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக நான் கூறுகின்ற தேதி, நாளில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றாலும், கணக்கிற்காக எதிரிமீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் அரசிற்கு ஆதவராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**